விருது .....




சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சென்னையில் செவ்வாய்க்கிழமை
நாதப்ரம்மம் யுனைடெட் கியான் அகாதெமி சார்பில் நாதப்ரம்மம் 21-ஆம் ஆண்டு தொடக்க விழாவி
நாத வினோதினி விருதை பன்முகத் திறன் கொண்ட ஓவியர் சரிதா திவேதிக்கு வழங்கிய
சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த். உடன் நடன கலைஞர் வி.பி.தனஞ்செயன்,
நாதப்ரம்மம் நிறுவனர் வழக்குரைஞர் என்.சுப்ரமணியன்.

CHENNAI

# Naadha Vinodhini award presented to physically challenged artist

SPECIAL CORRESPONDENT

CHENNAI JUNE 22, 2022 01:22 IST
UPDATED: JUNE 22, 2022 01:22 IST

**Sarita Dwivedi who lost both her hands and a leg paints with her mouth**

Remaining articles this month

7 Start 14 Days Free Trial or Subscribe to The Hindu

The contours, the colours and the lines in the paintings showcase the dexterous hand of a painter at work, except that the paintings were not executed with a hand but with the mouth of physically challenged artist Sarita Dwivedi. Ms. Sarita who lost both her hands and one leg due to an electric shock in her childhood has overcome the odds of losing her hands and legs to become a prolific painter. The hundreds of paintings have won her one international award and four national awards.

Ms. Sarita added to her portfolio of international and national awards, the 'Naadha Vinodhini' award presented by Naadhabrahmam United Gyan Academi at the Music and Yoga Day celebration held in the city on Tuesday. The physically challenged artist said her parents, particularly her mother, motivated her to become a painter and an independent person despite the tragedy she suffered. Ms. Sarita is working in the Artificial Limbs Manufacturing Corporation of India and is also a brand ambassador for the company.

Madras High Court Judge Anita Sumanth, who was the chief guest, conferred the title 'Naadha Vinodhini' on Ms. Sarita. Bharatanatyam dancer V.P. Dhananjayan also lauded the young painter as a role model.

The function concluded with a Guru Smaranam performance by vocalist Udayalur Kalyanaraman. N. Subramanian, founder of Naadhabrahmam United Gyan Academi, welcomed the chief guest.



■ நாதப்ரம்மம் 21ம் ஆண்டு துவக்க விழா மற்றும் சர்வதேச இசை, யோகா தினத்தை முன்னிட்டு, விருது வழங்கும் விழா நேற்று நடந்தது. இதில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த், கலை ஓவியர் சரிதா திவேதிக்கு, 'நாத வினோதினி' விருது வழங்கினார். உடன், நடன கலைஞர் தனஞ்செயன் மற்றும் நாதப்ரம்மம் நிறுவனர் சுப்ரமணியன். இடம்: மயிலாப்பூர்.

பி.ஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல். அஞ்சல்/கூரியர் மூலம் அனுப்ப கொள்ளலாம்.



▲ நாதப்ரம்மம் யுனைடெட் கியான் அகாடமி சார்பில் நாதப்ரம்மம் 21-ம் ஆண்டு தொடக்க விழா மற்றும் உலக இசை, யோகா தினத்தை முன்னிட்டு விருது வழங்கும் விழா சென்னை மயிலாப்பூரில் நேற்று நடைபெற்றது. விழாவில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் பங்கேற்று, சரிதா திவேதிக்கு 'நாத வினோதினி விருது' வழங்கினார். உடன் நடன கலைஞர் வி.பி.தனஞ்செயன் மற்றும் நாதப்ரம்மம் நிறுவனர் சுப்ரமணியன் உள்ளிட்டோர். படம் : ம.பிரபு

# சாதனைக்கு முன்னுதாரணம் சரிதா திவேதி

## ● நாதப்ரம்மம் விழாவில் நீதிபதி அனிதா சுமந்த் பாராட்டு

■ சென்னை

நாதப்ரம்மம் யுனைடெட் கியான் அகாடமி சார்பில் நாதப்ரம்மம் 21-ம் ஆண்டுதொடக்கவிழா மற்றும் உலக இசை, யோகா தினத்தை முன்னிட்டு விருது வழங்கும் விழா சென்னை மயிலாப்பூரில் நேற்று நடைபெற்றது.

அதில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் பங்கேற்று, உத்தரபிரதேச மாநிலம் கான்பூரை சேர்ந்த மாற்றுத் திறனாளி பெண் ஓவியர் சரிதா திவேதிக்கு 'நாத வினோதினி' விருதை வழங்கி கவுரவித்தார். பின்னர் அவர் நிகழ்ச்சியில் பேசியதாவது:

விருது பெற்ற பெண் சரிதா திவேதி சிறு வயதில் மின் விபத்தில் சிக்கியதால் தனது கை மற்றும் கால்களை இழந்துள்ளார். இருப்பினும் தன்னம்பிக்கையுடன் தனது திறனை . வளர்த்துக்கொண்டு, ஓவியம் வரைவதில் சிறந்துவிளங்குகிறார். உடலால் அவருக்கு பல தடைகள் இருந்தாலும், உள்ளத்தால் அந்த தடைகளைத் தகர்த்து, சாதனையாளராக மாறியுள்ளார். இவர் மின் சக்தியால் பாதிக்கப்பட்டிருந்தாலும், பல்வேறு காரணங்களால் துவண்டு கிடக்கும் இளம் தலைமுறை வெகுண்டு எழுவதற்கான மின் சக்தியாகவும், சாதனை புரிய விரும்புவோருக்கு முன்னுதாரணமாகவும் விளங்குகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

நடனக் கலைஞர் வி.பி.தனஞ்செயன் பேசும்போது, "நாதப்ரம்மம் அமைப்பு ஆண்டுதோறும் சிறந்த சாதனையாளர்களை கவுரவித்து வந்தாலும், இந்த முறை, வருங்கால தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சரிதா திவேதியை தேர்ந்தெடுத்ததற்காக, அதன் நிறுவனர் என்.சுப்ரமணியனை நான் பாராட்டுகிறேன்" என்றார்.

நாதப்ரம்மம் நிறுவனர் என். சுப்பிரமணியன் பேசும்போது, "இந்த சாதனை பெண் சென்னை வரும்போது, இவரது பிரத்தியேக சக்கர நாற்காலியை விமானத்தில் ஏற்ற விமானநிறுவனம் அனுமதிக்கவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது.

இதுபோல் சென்னையில் நொளம்பூர் சார்-பதிவாளர் அலுவலகத்திலும் மாற்றுத் திறனாளிகள் செல்வதற்கான வசதி இல்லை. அதனால் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சிரமப்படுகின்றனர். இப்பெண் கைகளை இழந்தாலும், தனது வாயால் வரையும் ஓவியங்களை பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது. இது போன்ற திறமைகளை இப்பெண் பெற்றிருப்பது, கடவுள் அவருக்கு தந்த வரம்" என்றார்.